

# அருள்மிகு வசிஷ்டேஸ்வரர் திருக்கோயில்

[ குருபரிகார ஸ்தலம் ]

திட்டை, தஞ்சாவூர் மாவட்டம் – 613 003.

பசலி - 1429

## குரு பெயர்ச்சி விழா - 2019 அழைப்பிதழ்

விழா துவக்கம்

**29.10.2019 - செவ்வாய்க்கிழமை முதல்**

திட்டைக்கு வருக ! தி(கு)ருவருள் பெறுக !!

உ

அருள்மிகு வரசித்தி விநாயகர் துணை

# அருள்மிகு வசிஷ்டேஸ்வரர் திருக்கோயில்

**( குருபரிகார ஸ்தலம் )**

*திட்டை, தஞ்சாவூர் மாவட்டம் - 613 003.*

## குருபெயர்ச்சி விழா அழைப்பிதழ்

முன்னைநான் மறையவை முறைமுறை குறையொடும்
தன்னதாள் தொழுதெழ நின்றவன்தன்னிடம்
மன்னுமா காவிரி வந்தடிவருடநல்
செந்நெலார் வளவயல் தென்குடித்திட்டையே.

**- திருஞான சம்பந்தர்**
(தேவாரம்)

அன்புடையீர், வணக்கம்.

தமிழகத்தின் தொன்மையான திருக்கோயில்களில் ஒன்றானதும் திருஞானசம்பந்தரால் பாடல் பெற்றதுமான திட்டை, மூர்த்தி, தலம், தீர்த்தம் என மூன்றிலும் சிறந்து விளங்குகிறது. இப்புகழ் பெற்ற தலத்தில் நவக்கிரகங்களில் சுபகிரகமான குருபகவான் எங்கும் இல்லாச் சிறப்போடு தனி சன்னதியில் இராஜகுருவாக எழுந்தருளி தரிசிப்பவரின் தோஷம் நீக்கி வேண்டுபவர்க்கு வேண்டுவன அருள்பாலித்து வருகிறார்.

நிகழும் விளம்பி வருடம் **ஐப்பசி மாதம் 12-ஆம் நாள் செவ்வாய்கிழமை (-29.10.2019-) அன்று அதிகாலை 03.49 மணிக்கு அருள்மிகு குருபகவான்** **விருச்சிக** இராசியில் இருந்து **தனுசு** இராசிக்கு பெயர்ச்சி அடையும் விழா வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது. இவ்விழாவை முன்னிட்டு இலட்சார்ச்சனையும், சிறப்பு பரிகார ஹோமங்களும் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் இறையன்பர்கள் பெருமளவில் கலந்து கொண்டு அருள்மிகு குருபகவான் பேரருள் பெறக்கேட்டுக் கொள்கிறோம்.

**குருபெயர்ச்சியை முன்னிட்டு**

**ரிஷபம், கடகம், கன்னி, துலாம், தனுசு. மகரம் மற்றும் மீனம்**

**ஆகிய இராசிகளில் பிறந்தவர்கள் பரிகாரம் செய்து கொள்வது அவசியம்.**

**08.11.2019**
(ஒரு நாள் மட்டும்)
**இலட்ச்சார்ச்சனை நடைபெறும்**

| இலட்சார்ச்சனை கட்டணம் |
| --- |
| ரூ. 300/- |

**09.11.2019 முதல்**
**12.11.2019 வரை** (நான்கு நாட்கள்)
**சிறப்பு குரு பரிகார ஹோமம் நடைபெறும்**

| பரிகார ஹோம கட்டணம் |
| --- |
| ரூ. 500/- |

பரிகாரம் செய்ய நேரில் வரமுடியாதவர்கள் **இலட்சார்ச்சனைக்கு ரூ. 300/-** மற்றும் **பரிகார ஹோமத்திற்கு ரூ. 500/-** மணிஆர்டர் அல்லது டிமாண்ட் டிராப்ட் எடுத்து 12.11.2019-க்குள் அனுப்பினால் (காசோலை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது) அவர்களுக்கு அர்ச்சனை / சங்கல்பம் செய்து குருபகவான் உருவம் பொறித்த 2 கிராம் வெள்ளி டாலருடன் பிரசாதம் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

இங்ஙனம்

**கோ. முரளிதரன்,** எம்.ஏ., எம்.பில்., பி.எட்.,
தக்கார்

**மா. தனலெட்சுமி,** பி.காம்.,
செயல் அலுவலர்

**திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் கிராமவாசிகள், திட்டை.**

# அருள்மிகு குருபகவான் பெருமை

குருபகவான் ஒரு முழுசுபகிரகம் ஆவார். குருவின் பார்வை மிகவும் விசேஷமானது. குருபார்க்க கோடி நன்மை என்பதும். குருபார்க்க கோடி தோஷம் விலகும் என்பதும் ஜோதிடப் பழமொழிகள் ஆகும். குருபகவான் தான் இருக்கும் இடத்தை விடவும் பார்க்கும் இடங்களை சுபத்துவம் பெறச்செய்வார். மேலும் ராகு, கேது, சனி, செவ்வாய், புதன் சுக்கிரன் போன்ற கிரகங்களினால் வரும் தோஷங்களை தனது பார்வை பலத்தினால் குறைக்கும் சக்தி படைத்தவர் குருபகவான் ஒருவரே.

உலகம் முழுவதும் பணம், பொன், பொருள் இவற்றிற்கு குருபகவானே அதிபதி. எனவே, இவர் தனகாரகர் என்றும், திருமணத்தடை நீங்கி திருமணம் செய்து வைத்து புத்திரப் பேற்றுக்கும் உதவுவதால் இவர் புத்திரகாரகர் என்றும் அழைக்கப்படுகிறார்.

ஒருவருடைய ஜென்மராசியிலிருந்து 2,5,7,9,11 ஆகிய இடங்களில் குருபகவான் வரும்போது நற்பலன்கள் நடக்கும். ஜென்மராசியான 1 ஆம் இடம் மற்றும் ஜென்மராசியிலிருந்து 3,4,6,8,10,12 ஆகிய இடங்களில் குருபகவான் சஞ்சரிக்கும் போது நற்பலன்கள் குறையும் என்பதும் பொதுவிதி.

## அருள்மிகு வசிஷ்டேஸ்வரர்



வசிஷ்ட முனிவரால் பூஜிக்கப்பட்டதால் வசிஷ்டேஸ்வரர் சுயம்புவாகத் தோன்றியதால் தான்தோன்றீஸ்வரர் என்ற பெயரும் கொண்டவர். மூலஸ்தான விமானத்தில் சந்திரகாந்தக்கல் வைத்துக் கட்டப்பட்டுள்ளது. அக்கல் காற்றில் இருக்கும் ஈரப்பதத்தை தன்னுள் உறிஞ்சி 24 நிமிடத்திற்கு ஒரு முறை ஒரு சொட்டு நீரை மூலவர் வசிஷ்டேஸ்வரர் மீது நித்யாபிஷேகம் செய்யும் அதிசயம் வேறு எந்த ஒரு கோயிலிலும் காண முடியாத அற்புதம்.

## அருள்மிகு சுகந்தகுந்தளாம்பிகை



அருள்மிகு சுகந்தகுந்தளாம்பிகை இத்தலத்தில் இறைவனுக்கு நிகரான மிக உயர்ந்த பீடத்தில் அமர்ந்துள்ளார். அதனால் மிகச்சிறந்த சக்தி பீடமாக இத்தலம் அமைந்துள்ளது. இந்த அன்னையை வழிபடுவதால் மணமாகாத கன்னியருக்கு திருமணமாகும். குடும்பச் சிக்கல்கள், குழப்பங்கள் நீங்கும் அம்பிகையின் சன்னதியில் மேல் விமானத்தில் மேஷம் முதல் மீனம் வரை 12 இராசிகளும் உரிய அமைப்பில் செதுக்கப் பட்டுள்ளன. அந்தந்த இராசிக்காரர்கள் தங்கள் இராசியின் கீழ் நின்று பிரார்த்தனை செய்து கொள்ள தோஷங்கள் நீங்கும் என்பது நம்பிக்கை.

# அன்னதான திட்டம்



இத்திருக்கோயிலில் தமிழ்நாடு அரசு சார்பில் அன்னதானம் நடைபெறுகிறது. நாள் ஒன்றுக்கு ஐம்பது நபர்கள் பயன் பெறுகிறார்கள். பக்தர்கள் தங்கள் பிறந்த நாள், திருமண நாள் மற்றும் தாங்கள் விரும்பும் முக்கிய நாட்களில் இத்திட்டத்தில் கலந்து கொண்டு இறையருள் பெற அன்புடன் அழைக்கிறோம்.

**நாள் ஒன்றுக்கு - ரூ.1,500/ (ஐம்பது நபர்கள்)**

**நிரந்தர வைப்பு நிதி - ரூ.15,000/**

தாங்கள் வழங்கும் தொகை நிரந்தர வைப்பு நிதியில் சேர்க்கப்பட்டு, வருடந்தோறும் தாங்கள் விரும்பும் நாட்களில் (ஒரு நாள்) அன்னதானம் வழங்கப்படும். மேற்படி அன்னதான திட்டத்திற்கு வழங்கும் தொகைக்கு வருமான வரி விலக்கு (80-G) உண்டு.

## இத்திருக்கோயிலில் வழங்கப்படும் கட்டண சீட்டுகள் விபரம் :

| | | | |
|---|---|---|---|
| 1. | அர்ச்சனை சீட்டு | ரூ. | 5.00 |
| 2. | கட்டளை அர்ச்சனை சீட்டு | ரூ. | 240.00 |
| 3. | அபிஷேக சீட்டு | ரூ. | 550.00 |
| 4. | நித்திய ஆராதனை கட்டளை | ரூ. | 2000.00 |
| 5. | இலட்சார்ச்சனை சீட்டு (குருபெயர்ச்சியின் போது மட்டும்) | ரூ. | 300.00 |
| 6. | பரிகார ஹோம சீட்டு (குருபெயர்ச்சியின் போது மட்டும்) | ரூ. | 500.00 |


தொடர்புக்கு

செயல் அலுவலர்

அருள்மிகு வசிஷ்டேஸ்வரர் திருக்கோயில்,

திட்டை, தஞ்சாவூர் மாவட்டம் - 613 003.

போன் : 04362 - 252858, 90479 20205

Contact

Executive Officer

Arulmigu Vashisteswarar Temple

Thittai, Thanjavur - 613 003.

Phone : 04362 - 252858, 90479 20205

e - mail : eothittai@gmail.com website : www.hindutemplethittaiguru.com



MDD 9940998426